**தலைப்பு 299 – இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகம்**

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 யூலை 2 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அலுவலகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய

வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் திணைக்களத்தால் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும்.

- சரியான நேரத்தில் கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்கு அலுவலகத்தின் உள்ளக கட்டுபாட்டின் செயல்திறன் குறித்து அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கு உத்தேசிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் மற்றும் உள்ளடக்கங்களை அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பை மதிப்பீடு செய்தல் மற்றும் கட்டமைப்பு நிகழ்வுகளானவை நிதிக்கூற்றுக்களிற்கு பொருத்தமானவை மற்றும் நியாயமானவை.

- ஓட்டுமொத்த நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கின்ற பொழுது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களின் கீழ் கொடுக்கல் வாங்கல்கள மற்றும் நிகழ்வுகளானவை பொருத்தமானவை மற்றும் நியாயமானவையாகும்.

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ஈ) உப பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டோடு ஒத்துப்போகின்றது என்று கூற முடியாது,ஏனெனில் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படவில்லை.ஆகையால், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் உள்ளடக்கப்படவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 ஆதனம் பொறி மற்றும் உபகரணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்நாட்டு அமைச்சினால் ஏற்பாடுகளை பயன்படுத்தி பெறப்பட்ட ரூபா 3,861,267 பெறுமதியுடைய சொத்தானது வேறு இயந்திரம் மற்றும் உபகரணங்களாக நிதியில்லா சொத்துகளில் காட்டப்பட்டது. | உள்நாட்டு அமைச்சில் இருந்து பெறப்பட்ட சொத்து பெறப்பட்ட அலுவலகத்தில் சொத்தாக பதியப்பட வேண்டும். | பெறப்பட்ட சொத்துகளின் செலவு பதியப்பட்ட போதிலும் அமைச்சுக்கு எழுத்து மூலம் அறிவிக்க தவறவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் துறையில் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்ட பின்பு சொத்துகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

#### 1.6.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்கீட்டு உத்தியோகத்தர் கட்டாயமாக திணைக்களத்தின் நிதி கட்டுபாட்டிற்காக வினைத்திறனான உள்ளககட்டுப்பாட்டு முறைமையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரிப்பதாக உறுதிப்படுத்துவதோடு மற்றும் முறைமையின் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (இ)பிரிவின் பிரகாரம் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறனின் மீளாய்வினை பிரதான கணக்கீட்டு உத்தியோத்தர் சமர்ப்பிப்பதற்கு தவற விட்டார்.அமைச்சிற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | வினைத்திறன் காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்படுவதாகவும் மற்றும் முறைமையின் வினைதிறனை உறுதி செய்ய தேவையான மாற்றங்கள் செய்யப்படுவதாகவும் மற்றும் அவ்வாறான மீளாய்வுகள் எழுத்து மூலமாக செய்யப்பட வேண்டியதோடு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மீளாய்வு மேற் கொண்டதாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | சட்டத்தின் படி எதிர்காலத்தில் தவணை சான்றிதழ்களை பற்றி எழுத்து மூலம் கணக்காய்வாள் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்படவுள்ளது. |
| (ஆ) | உள்ளக கணக்காய்வு செயற்பாட்டை முறையாக செய்ய ஒரு வினைத்திறனான முறை இருப்பதை கணக்கீட்டு அதிகாரி உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அறிக்கையின் 4 வது பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளின் படி,அது அடையப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு நியமனம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியுடன் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.2019 ஆம் ஆணடிற்கான நிதி ஏற்பாடுகளின் பற்றாக்குறை காரணமாக ,2020 இல் இருந்து அனுமதி வழங்கப்பட்டது,ஆகையால் பொது நிர்வாக அமைச்சிற்கு அந்த ஆண்டை ஈடு செய்ய கோரிக்கை விடுக்கப்பட்டது. |

### 1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் பற்றிய குறிப்பு**<br>2003 இன் 36 ஆம் இலக்க புலமைகள் சொத்துக்கள் சட்டத்தின் பிரிவு 175 இன் திருத்தப்பட்ட 2006 இன் 01 ஆம் இலக்க புலமைகள் கட்டளையின் பிரிவு 58 (2) | | |

| | | |
|---|---|---|
| முகவர்களை ஆட்சேர்த்தல் மற்றும் பதிவு செய்தலிற்கான தேர்வு சட்டத்தின் முகவர் ஆட்சேர்ப்பு ஏற்பாடுகளின் படி நடக்க வேண்டிய போதிலும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகவர்களை ஆட்சேர்ப்பு செய்வதன் அவசியத்தை கருத்தில் கொண்டு புலமைகள் சொத்து ஆணைக்குழுவுடன் கலந்துரையாடிய பின்னர் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 வேறு அமைச்சர்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியத்தை பயன்படுத்தல்

2018 ஆம் ஆண்டிற்கான சர்வதேச வியாபார குறி பதிவுக்கான மாட்ரிட் நெறிமுறைக்கு ரூபா 29,000,000 மதிப்புள்ள ஏற்பாடுகளை வரி அமைச்சு வழங்கியுள்ளது.அதில் ரூபா 17,176,802 பயன்படுத்தப்பட்டதால் ரூபா 11,823,198 மீதி காணப்பட்டது மற்றும் இது மொத்த ஏற்பாட்டில் 40 சதவீதமாகும்.இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வியாபார குறி விண்ணப்பத்தினை ஏற்றுக்கொண்டவுடன் வர்த்தமானி அறிவிப்புக்கான பிரசுரித்தல் கட்டணமாக ரூபா 14,107,927 மற்றும் மீளாய்வாண்டிற்கான செலவிடப்பட்ட மொத்த தொகை ரூபா 14,552,127 இல் ரூபா 444,200 மொழி பெயர்ப்பிற்காக செலவிடப்பட்டது.இருப்பினும், கட்டணம் வாடிக்கையாளரிடமிருந்து வர்த்தமானி அறிவிப்பு பிரசுரிப்பதற்காக வசூலிக்கப்பட்டது மற்றும் 2017 ஆம் ஆண்டில் இந்த கட்டணங்களை செலவிடாமல் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா26,000,000 தொகையில் ரூபா 14,635,318 அதே நோக்கத்திற்காக செலவிடப்பட்டது. | கட்டணம் வசூலிக்கப்பட்டால்,திட்டத்திற்கான ஏற்பாடுகளில் இருந்து நிதியை பயன்படுத்துவது தேவையற்றது. | வியாபார குறியை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்னர் விண்ணப்பதாரர்கள் வர்த்ததானியில் பிரசுரிப்பதற்காக அரச அச்சளாரிற்கு கட்டணம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது.கட்டணம் செலுத்திய பிறகு,வர்த்தமானி பிரசுரிக்கும் பிரிவினால் வெளியீடு மூன்று மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு வர்த்தமானிக்கு அனுப்பப்படும்.வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக நாங்கள் வசூலிக்கும் தொகை அரசாங்கத்தால் வழங்கப்படும் சேவைக்கானது மற்றும் இது தனியார் துறைக்கு செலுத்தும் கொடுப்பனவு அல்ல. |
| (ஆ) | புலமைகள் சொத்து சட்டத்தின் படி சட்டத்தேவைப்பாடுகள் மற்றும் விதிமுறைகள் மற்றும் வியபபார குறி பதிவை புதுப்பிக்கும் நோக்கத்திற்காவும் | திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் சரியான நேரத்தில் மற்றும் தாமதமின்றி மேற் கொள்ளப்பட வேண்டும் மற்றும் செலவினங்களுக்கு போதுமான சேவை | ஆகஸ்ட் 2 திகதியிடப்பட்ட அமைச்சரவை பத்திரத்தின் அனுமதியுடன் ஒரு வெளி நிறுவனத்தின் சேவை பெற வேண்டி இருந்தது.2018 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பதிப்புரிமை விதிமுறைகள் |

| | | |
|---|---|---|
| திருத்தங்களை உருவாக்கும் நோக்கத்திற்காகவும் ஒரு ஆலோசனை சேவை பணியமர்த்தப்பட்டது.இந்த நோக்கத்திற்காக ரூபா 4,504,877 மற்றும் ரூபா 1,995,123 மொத்தமாக ரூபா 6,500,000 முறையே 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் செலுத்தப்பட்டது.நிறுவனம் 2017 ஒக்டோபர் இறுதியளவில் வரைவு விலையை அமைச்சரவையில் சமர்ப்பிக்க ஒப்பு கொண்டது,ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை மற்றும் ஒப்பந்தம் 2018 ஏப்ரல் மாதத்தில் காலாவதியானது. | வழங்கப்பட வேண்டும். | மற்றும் புவியியல் வரைவு சட்டங்களில் அவசர திருத்தங்களை புலமைகள் சொத்துக்கள் ஆணைக்குழு கருத்திற் கொண்டு வந்ததால்,மாட்ரிட் ஒப்பந்தத்தின் படி உருவாக்கப்பட்ட சட்டங்களுக்கான திருத்தங்களை கருத்தில் கொள்ள ஆணைக்குழு தவறிவிட்டது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணம் விடுவிக்கப்ட்டிருந்தாலும் முன்னேற்றப்படாத திட்டங்கள்

2016 முதல் 31 டிசம்பர் 2017 வரையிலான காலகட்டத்தில் வரி அமைச்சினால் ஏற்பாட்டிற்கு ரூபா 64,000,000 வழங்கப்பட்ட தொகையில்,தற்போது செயறபாட்டில் உள்ள மாட்ரிட் நெறிமுறையை தொடங்க ரூபா 62,257,628 பயன்படுத்தப்பட்டது. மேலே உள்ளவை தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முதலாம்,இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டுகளில் பராமரிப்புக்காக ரூபா 7.5 மில்லியன் உட்பட ஒரு புதிய கணணி முறையை செயற்படுத்த ஒரு சர்வர் இயந்திரத்தை வாங்குவதற்கு தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனத்திற்கு ரூபா 32.5 மில்லியன் 2016 டிசம்பர் மாதம் செலுத்தப்பட்டது.இரு தரப்பினருக்கும் இடையில் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எந்த கட்டண விதி முறைகளும் இல்லை மற்றும் முழு செலவீடு மதிப்பீடு | செலவினத்திற்கு அதிக பட்ச நன்மையை பெறப்பட வேண்டும். | சர்வர் இயந்திரத்தின் பெறுகைகள் செயல்முறை இலங்கையின் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனத்தினால் 2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.(ஐ சி டி எ) இருப்பினும், 2019 பெப்ரவரி 1 ஆம் திகதிக்குள் இயந்திரத்தின் கொள்முதல் செயல்முறையை முடிக்க நிறுவனம் தவறி விட்டதால், சாத்தியமான சட்ட நடவடிக்கை குறித்து விசாரித்து 12 பெப்ரவரி 2019 திகதியிடப்பட்ட கடிதம் சட்டமாதிபர் தலைமையதிபதி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது.2019 |

| | | | |
|---|---|---|---|
| | மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளது.ஒப்பந்தத்தில் பிரிவு 4.3 இல் குறிப்பிடுப்படுவதாவது,அனைத்து பெறுகைகள் செயல்முறைக்கும் நிறுவனம் பொறுப்பாகும் மற்றும் ஒப்பந்தத்தின் நிதியில் இருந்து 6 மாதங்களுக்குள் பெறுகைகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.இருப்பினும்,2019 மே இறுதி வரை சர்வர் இயந்திரத்தை பெற நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | பாராளுமன்ற பாதீட்டு விவாதத்தில் எழுப்பப்பட்ட கேள்வியை தொடர்ந்து ஐ சி டி எ தனது அதிகாரிகளுடன் 23 மார்ச் 2019 இல் ஒரு கூட்டத்தை நடத்தியது.எனினும், ஐ சி டி எ இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை.இந்த கொள்முதலை நிறைவேற்ற ஐ சி டி எ எந்த நடவடிக்கையும் எடுக்காததால்,சுற்றறிக்கையில் உள்ள விதிமுறைகளை பின்பற்றி அமைச்சரவைக்கு எழுத்து பூர்வமாக ஒரு அறிவிப்பை சமர்ப்பிக்க அமைச்சின் செயலாளர் முடிவு செய்தார். |
| (ஆ) | திட்டத்தை செயல்படுத்த தேவையான பௌதிக வசதிகளை கட்டும் நோக்கத்திற்காக வர்த்தக சபையின் தரை தளம் குத்தகைக்கு விடப்பட்டது.மே 2016 இல் இருந்து மே 2018 வரை இரண்டு வருட காலத்திற்கு ரூபா 4,672,500 தொகை செலவிடப்பட்டிருந்தாலும்,கட்டிடம் உத்தேசிக்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படவில்லை.ஆனால் அகற்றலுக்கான களஞ்சியமாக பயன்படுத்தப்படுகிறது. | நிதி விதிகளின் அதிக பட்ச பயன்பாட்டிற்கு செயற்பட வேண்டும். | மடரிட் நெறிமுறையின் ஊழியர்கள் அலுவலக வளாகத்தில் இடத்தை உருவாக்க வேண்டியிருந்தது,எனவே அகற்றப்பட்ட பொருட்கள் மற்றும் கோப்புக்கள் வர்த்தக சபை கட்டிடத்தின் தரை தளத்திற்கு மாற்ற வேணடி இருந்த்ந.மேலும் மாட்ரிட் நெறிமுறையின் கடமைகளை செய்ய ஐபிஏஸ். திட்டம் தேவைப்படுகிறது மற்றும் அங்கு அந்த பிரிவு நிறுவப்பட்டிருந்தால், ஐபிஏஸ் திட்டம் இயங்குவதற்காக ரூபா 2 மில்லியனை விட அதிகமான செலவுடைய கணணிகள் வலையமைக்கப்படுகின்றது.இந்த வசதி மட்ரிட் நெறிமுறையுடன் தொடர்புடைய நிராகரிக்கப்பட வேண்டிய கோப்புக்களை சேமிக்க பயன்படுத்தப்பட்டது. |

## 3.2 வருடாந்த செயல்திறன் அறிக்கை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 12 செப்டெம்பர் 2002 திகதியிடப்பட்ட பொதுநிதி சுற்றறிக்கை இல 402 இன் படி , நிதியாண்டு முடிவடைந்ததில் | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். | ஜனாதிபதி செயலாளரின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டிற்கான செயல்திறன் |

| | | |
|---|---|---|
| இருந்து 150 நாட்களுக்குள் பொருத்தமான செயல்திறன் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டும். ஆனால் அலுவலகத்தின் 2015 , 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை 2019 மே வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் செயல்திறன் அறிக்கை அமைச்சின் அனுமதிக்காக சமர்பிக்கப்பட்டுள்ளது. |

## 4 நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச சட்டத்தின் உப பிரிவின் 40(1) மற்றும் நிதி ஒழுங்கு விதிகள் 133 இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளர் நியமிக்கப்படவில்லை. மற்றும் குறைந்தபட்சம் அமைச்சின் கணக்காய்வு பிரிவினால் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை. | நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்தின் செயற்பாடுகளில் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வாளர் பதவி 06.04.2019 திகதியிடப்பட்ட கடிதத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தது மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான ஏற்பாடுகளில் ஏற்பட்ட பற்றாக்குறை காரணமாக பதவிக்கான ஊழியரை நியமிப்பதில் பிரச்சினை காணப்பட்டது. எவ்வாறாயினும் உள்நாட்டு நிர்வாக அமைச்சின் செயலாளரிற்கு பதவி செயற்றிட்டத்தை நிரப்புவதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. |

## 5 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 31 நொவம்பர் 2018 ல் அனுமதிக்கப்பட்ட ஊழியர்கள் 98 ஆக இருந்த நேரத்தில் உண்மையான ஊழியர்கள் 81 ஆக காணப்பட்டதால் 17 வெற்றிடங்கள் உருவாக்கப்பட்டது, | தேவையான ஊழியர்களை சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆயத்தங்கள் செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 10 மூன்றாம் நிலை காப்புரிமை பரீட்சகர்களில் 9 வெற்றிடங்கள் உள்ளன, இது காப்புரிமையை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதற்கான முக்கிய காரணமாக உள்ளது. | தேவையான ஊழியர்களை சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆயத்தங்கள் செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |